**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.No.598/2014**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரபாகரன் | **Caste** | : |
| **Father's Name** | : செல்லப்பாண்டி | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **33/2026** |
| | | **Dated** | : **24.08.2026** |

**24.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி–1 **திரு. பிரபாகரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01-10-2014 ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று 14.15 மணிக்கு அரசு மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செபஸ்டியன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று 14.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.578/2014 சட்டப்பிரிவுகள் 324, 506(ii) இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார்.

பின்பு மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு.பக்தவசலம் அவர்கள் பார்வைக்கு சமர்ப்பித்துள்ளார். அதன் பின்பு சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் உபகாரசாமி, விக்டர் டேவிட் என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து கையொப்பம் பெற்று பின்பு சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். அதன் பின் சாட்சிகள் 1.செபஸ்தியான், 2.ஜெகநாதன், 3.ஜோஸ்வின் செல்வகுமாரி விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

எதிரியை தேடிவந்த நிலையில் அன்றையதினமே 17.00 மணிக்கு வழக்கின் எதிரி அனுமந்தநகர் ரயில்வே கேட் அருகில் இருந்த பிள்ளையார் கோவில் முன்பு நின்றிருந்த இவ்வழக்கின் எதிரி சிலுவை முத்துவை காரணம் கூறி கைது செய்து 17.30 மணிக்கு நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்பு வழக்கில் காயச்சான்று வழங்கிய டாக்டர் ஐவான் மோசஸ் அவர்கள் 04.10.2014ம் தேதி சிகிச்சையில் இருந்த வாதிக்கு தலைமறைவாக சென்றுவிட்டார் என்று No Definite opinion என சான்று பெற்றும் சான்று வழங்கிய மருத்துவரை விசாரித்தும் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு 30.10.2014ம் தேதி வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(ii) இதசன் படி குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரிக்காமலும் ஆவணங்களை பார்வையிட்டு உரிய விசாரணை மேற்கொள்ளாமலும் எதிரிகளுக்கெதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.24 14:37:26 +0530

Judicial Magistrate No.II
Dindigul.